Crl. Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure.)
----------

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, VALPARAI.

Summary Trial Case No.: STC 186/2020 06-04-2022 - புதன்கிழமை

Miscellaneous :

Prosecution : அ.சா.1

Deposition of Witness for

Name : உதயசூரியன்

Father's Name : நாகமுத்து

Age : 59

Taluk : வால்பாறை

Religion : இந்து

Calling : உதவி ஆய்வாளர்

Solemnly affirmed in accordance with the Act 44 of The Oaths Act 1969, Section 6(2) of the day of 06-04-2022

முதல் விசாரணை:

நான் முடீஸ் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். 23-02-2020 ம் தேதி நான் ஷேக்கல்முடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தேன். வால்பாறை காவல் ஆய்வாளர் அவர்களின் வாய் மொழி உத்தரவின் பேரில் 20-02-2020-ம் தேதியிலிருந்து உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது 23-02-2020-ம் தேதி வெள்ளைச்சாமி என்பவர் நிலையம் ஆஜராகி கறிகடை சம்பந்தமாக புகார் கொடுத்திருந்தார். வெள்ளைசாமியின் புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்தேன். அப்போது காவல் நிலையத்தின் வெளியே நின்றிருந்த ஆஜர் எதிரி பிரபு SI என்றால் பெரிய இவனா என்று சொன்னார். நான் காவல் நிலையத்தில் இருந்து வெளியே வந்தேன். எனது சட்டையை பிடித்து இழுத்து கீழே தள்ளி வாய் பகுதியில் குத்திவிட்டார். அப்போது அங்கு சுரேஷ் காவலர், SP கான்ஸ்டபிள் பணியில் இருந்தார்கள். பெண் போலீசார் ஒருவரும் பணியில் இருந்தார். போலீசார் வெளியே ஓடி

வரவும், எதிரி ஓடி விட்டார். நான் சிகிச்சைக்காக வால்பாறை அரசு மருத்துவமனைக்கு சென்றேன். நடந்த சம்பவம் குறித்து ஆய்வாளரிடம் புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் மனு அ.சா.ஆ.1, ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் கோரப்பட்டது.

Crl. Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure.)
----------

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, VALPARAI.

Summary Trial Case No.: STC 186/2020 06-04-2022 - புதன்கிழமை

Miscellaneous :

Prosecution : அ.சா.2

Deposition of Witness for

Name : மணிகண்டன்

Father's Name : ஜெயராஜ்

Age : 43

Taluk : வால்பாறை

Religion : இந்து

Calling : மட்டன் ஷாப்

Solemnly affirmed in accordance with the Act 44 of The Oaths Act 1969, Section 6(2) of the day of 06-04-2022

முதல் விசாரணை:

நான் வால்பாறையில் வசித்து வருகிறேன். கறி கடை வைத்து நடத்தி வருகிறேன். எதிரியை தெரியும். 23-02-2020 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியளவில் கறி வாங்குவதற்கு கறி கடையில் கூட்டம் அதிகமாகயிருந்தது. எனது அண்ணன் வெள்ளைச்சாமி கறி கடைக்கு வந்த நபர்களை, பக்கத்து கறி கடையை சேர்ந்த செந்தில் மற்றும் அவரது மனைவி ஆகியோர்கள் கையை பிடித்து தனது கடைக்கு அழைத்து சென்றது, சம்பந்தமாக எனது அண்ணன் வெள்ளைச்சாமி செந்திலிடம் கேட்டதற்கு, செந்தில் உடனடியாக எதிரி பிரபுக்கு போன் மூலம் தகவல் சொல்லி எதிரி கடைக்கு வந்து உங்களை எல்லாம் விடக்கூடாது, விட்டால் பெரிய ஆட்கள் ஆகி விடுவீர்கள். உங்களை வெட்டாமல் விடமாட்டேன் என்று சொன்னதால், எனது அண்ணன் வெள்ளைச்சாமி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். போலீசார் எதிரியை விசாரணைக்காக அழைத்து சென்றிருந்தார்கள். நானும், எனது அண்ணனுடன் காவல்

நிலையம் சென்றிருந்தேன். காவல் நிலையத்திற்கு வெளியே நான் நின்றிருந்தேன். காவல் நிலையத்திற்கு உள்ளே சத்தமாக கேட்டது. உள்ளே எட்டி பார்த்தபோது, எதிரி உதவி ஆய்வாளரை பார்த்து உனது யூனிபார்ம்மை கழட்டாமல் விடமாட்டேன் என்று சொல்லி நெஞ்சு சட்டையை பிடித்து கீழே தள்ளினார். உதவி ஆய்வாளர் கீழே விழுந்து கிடந்தார். அவரை தூக்கி, எதிரியை விலக்கி விட்டோம். வெளியில் நின்றிருந்தவர்கள் சம்பவத்தை விலக்கிவிட்டோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்வதற்கு கால அவகாசம் கோரப்பட்டது.

(ஒப்பம்/- எஸ்.பி.கவிதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

Compared by N. Karthi